



நாமக்கல் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், மறைந்த மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நாமக்கல் பூங்கா சாலையில் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார். தி.மு.க. தலைமை நிலைய பேச்சாளர் ஈரோடு இறைவன், தலைமை கழக இளம் பேச்சாளர் சூ.க.தாரணிஆகியோர் தமிழ் மொழிக்காக உயிர் நீத்த தியாகிகள், திராவிட இயக்கத்தின் வரலாறு சமூக நீதிக் கொள்கைகள் தற்போதைய அரசியல் சூழ்நிலை உள்ளிட்டவை குறித்து உரையாற்றினர். கூட்டத்தில் நாமக்கல் நகர செயலாளர்கள் ராணா ஆர்.ஆனந்த், அ.சிவக்குமார், கிழக்கு நகர செயலாளரும் மாநகராட்சி துணை மேயருமான செ.பூபதி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ப.சத்தியசீலன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





சேலம் மத்திய மாவட்டம் தி.மு.க மாணவரணி சார்பில் மொழிப் போர் தியாகிகள் வீரவணக்கம் கூட்டம் மாவட்ட கழக செயலாளர். அமைச்சர். இரா. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர். கோகுல் காளிதாஸ் வரவேற்று பேசினார். கொள்கைபரப்பு இணைச் செயலாளர். வி.சி. சந்திரகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். மற்றும். மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபாசு. மு. கார்த்திகேயன், மேயர். ஆ ராமச்சந்திரன் தொகுதி பார்வையாளர். டாக்டர். விவேக் மாநில துணைச் செயலாளர். இரா. தமிழரசன், . மாநகர கழக செயலாளர். பா ரகுபதி, கழக இளம் பேச்சாளர்.. சரண்யா. கோட்டை பகுதி செயலாளர். இப்ராகிம் ஆகியோர் பேசினார்கள்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# கூடலூரில் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம்!

## கே.எம்.ராஜூ – திப்பம்பட்டி ஆறுச்சாமி சிறப்புரை!

*நீலகிரி, ஜன. 27-*

மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்திடும் வகையில், நீலகிரி மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், வீர வணக்க நாள் பொதுக் கூட்டம், கூடலூர் காந்தி திடலில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது, கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன் வரவேற்றார்.



கூட்டத்தில், தலைமை கழக அறிவிப்பின்படி, மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, தலைமைக் கழக பேச்சாளர் கோணூர் வீரமணி, இளம் பேச்சாளர் தஸ்லிமா நஸ்ரின் ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

கூடலூர் தொகுதி பார்வையாளர் பரமேஷ் குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் திராவிடமணி, காசிலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் லியாக்கத் அலி, ஒன்றிய நகர செயலாளர்கள் சிவானந்த ராஜா, சுஜேஷ், சேகரன், ராஜா, உத்தமன், தலைமை கழக போச்சாளர் பாண்டியராஜ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், கூடலூர் நகராட்சி தலைவர் பரிமளா, பேரூர் செயலாளர்கள் சின்னவர், சுப்பிரமணி, உதயகுமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் விவேக் பொன்தோஸ், அருண், கிஷோக், பாயாஸ் உட்பட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள், மாணவர் அணியினர், கழக செயல்வீரர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கிஷோர் நன்றி கூறினார்.

### மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி தலைமையில்

# கோவை இடையர்பாளையத்தில் வீரவணக்க நாள் நிகழ்ச்சி!

## திருமதி மாலதி- – மதியழகன், குமரேசன், சம்பத், கண்ணகி, சோ. துரைபாண்டியன் முன்னிலை!

கோவை, ஜன. 27–

மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் நிகழ்ச்சி கோவை இடையர்பாளையம் பகுதி கழகம் சார்பாக, க. மருதமுத்து நினைவு முத்தமிழ் மன்றத்தில் பகுதி அலுவலக எதிரில் மாபெரும் விண் அதிர முழக்கத்துடன் நடைபெற்றது. வீரவணக்க நாள் நிகழ்ச்சியில், கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ. அ. ரவி, நிகழ்ச்சியினை தொடங்கி வைத்து மொழிப்போர்த் தியாகிகளை போற்றி சிறப்புரை ஆற்றினார். பகுதிக் கழகச் செயலாளர் கா. மதியழகன் ஒவ்வொரு மொழிப்போர்த் தியாகிகளையும் வாழ்த்துரைத்து முழக்கமிட அனைத்து கழக உடன்பிறப்புகளும் அதையே திரும்ப எதிரொலித்தனர்.







மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் திருமதி மாலதி முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், 35 ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா. சம்பத் , பகுதி கழக துணைச் செயலாளர் திருமதி கண்ணகி, அவைத் தலைவர் சோ துரைப் பாண்டியன் மாவட்ட பிரதிநிதி கல்யாணசுந்தரம், பகுதிக்கு உட்பட்ட புதிதாக பொறுப்பேற்ற 35 ஆவது 34 ஆவது வட்டக் கழக ஆறு பொறுப்பாளர்கள் முறையே, ஆர். குமரேசன், தம்பு என்ற கிருஷ்ண ராஜ், ஆறுமுகம், காளிதாஸ், மைக்கேல், ரஞ்சித் கமல், முன்னாள் எம். சி. நாகராஜ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் சுபக் குமார், BLA2 , BDA, BLC க்கள் மற்றும் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர், அனைத்து அணியினர், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு தமிழ் வாழ்க, ஹிந்தித் திணிப்பு ஒழிக என கோசமிட்டு, வீர முழக்கமிட்டு மொழிப்போர்த் தியாகிகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி, ஈரோடு இறைவன் - சூ.க.தாரணி பங்கேற்பு!

நாமக்கல், ஜன. 27–

நாமக்கல் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர்,, முன்னாள் மத்திய அமைச்சர் சி.சுப்ரமணியம், உள்ளிட்ட தி.மு.க. முன்னோடிகளின் நினைவுகளை போற்றும் வகையிலும், மறைந்த மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் நாமக்கல் பூங்கா சாலையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ப.சத்தியசீலன் வரவேற்றார். நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆர்.ஆனந்த் தலைமை வகித்தார்.

நாமக்கல் கிழக்கு நகர செயலாளரும் மாநகராட்சி துணை மேருமான செ.பூபதி, நாமக்கல் மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார்,, நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எம் எம் டி கௌதம் சி.சக்திவேல் சி.மணிகண்டன் பி.சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார்.திமுக தலைமை நிலைய பேச்சாளர் ஈரோடு இறைவன், தலைமை கழக இளம் பேச்சாளர் சூ.க.தாரணி ஆகியோர் தமிழ் மொழிக்காக உயிர் நீத்த தியாகிகள், திராவிட இயக்கத்தின் வரலாறு சமூக நீதிக் கொள்கைகள் தற்போதைய அரசியல் சூழ்நிலை உள்ளிட்டவை குறித்து உரையாற்றினர்.

தொடர்ந்து, நாமக்கல்லைச் சேர்ந்த மூத்த மொழிப்போர்த் தியாகியான மு.பொ.கந்தவேலுவை கௌரவித்து மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி பொற்கிழியை வழங்கினார். முன்னதாக, மொழிப்போர்த் தியாகிகளின் உருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், மாவட்ட துணை செயலாளர்கள் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், டாக்டர் மாயவன், மாநில நிர்வாகிகள் சி.ஆனந்தகுமார் இரா நக்கீரன் தலைமைக் கழகப் பேச்சாளர் ராஜகோபால், ஒன்றிய செயலாளர்கள் பழனிவேலு, அசோக்குமார், கௌதம், ஜெயபிரகாஷ், ஒன்றிய, நகர, பேரூர் திமுக நிர்வாகிகள்,, பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கடல் அரசன் கார்த்தி நன்றி கூறினார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## திருவண்ணாமலை த. பொன்முடி

## சனவரி 27 (2008)



திருவண்ணாமலை மாவட்டக் கழகச் செயலாளர், தண்டராம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட மையக் கூட்டுறவு வங்கித் தலைவர், தண்டராம்பட்டு ஒன்றியக் கழகச் செயலாளர், கிளைக் கழகச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தமிழ்நாடு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு

# ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கிய முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

சென்னை, ஜன.26–

தமிழ்நாட்டில் பணியாற்றி வரும் அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு நம்முடைய நினைவில் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது சிறப்பு காலமுறை ஊதியம், அகவிலைப்படி மற்றும் ஓய்வுபெறும்போது ஒட்டுமொத்த தொகை என வழங்கி வரலாறு படைக்கப்பட்டது.

ஒன்றிய அரசு நாடு முழுவதும் உள்ள அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர் களை பகுதி நேர பணியாளர்கள் அல்லது விருப்பத்தின் அடிப்படையில் தன்னார்வலர்களாக பணியாற்றி வருவதாகக் கூறி தொழிலாளர்கள் என அவர்களை அங்கீகரிக்க இன்றளவும் மறுத்து வருகிறது. இதனை தொடர்ந்து தொ.மு.ச. பேரவை சார்பாக நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தியபோதும் உரிய பதில் எதும் ஒன்றிய அமைச்சரால் வழங்கப்படவில்லை.

மாண்பமை உச்ச நீதிமன்றம், குஜராத் உயர் நீதிமன்றம் போன்றவைகள் இவர்களை தொழிலாளர்களாக அங்கீகரித்து காலமுறை ஊதியம், பணிக்கொடை உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு வழங்கத் தீர்ப்பளித்த பின்னரும் ஒன்றிய அரசு எந்தவித சலுகைகளையும் வழங்க மறுத்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2021 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவிடம் தொ.மு.ச. பேரவை கழகத் தலைவரின் ஒப்புதலுடன் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று தேர்தல் வாக்குறுதியாக கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மற்றும் சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களும் துறை செயலாளர் இயக்குநர்கள் அடங்கிய குழு 22.1.2026 அன்று தொழிற் சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்திய போது நாம் முன் வைத்த கோரிக்கைகளான, அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் வாழ்வில் ஒளியேற்றத்தக்க வகையில் சமூகப்பாதுகாப்புத் திட்டமான தற்போது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் ரூ.2000த்தை உயர்த்தி வழங்க வேண்டும் எனவும், ஓய்வு பெறும் போது வழங்கப்பட்டு வரும் ஒட்டுமொத்தத் தொகையான ரூபாய் ஒரு லட்சத்தை உயர்த்தி வழங்குவதற்கு முன் வர வேண்டும் எனவும், ஓய்வு பெற்று போதுமான ஓய்வூதியம் இல்லாத நிலையில், அப்பணியாளர்கள் இறந்து போனால் அவர்தம் குடும்பம் நிர்க்கதியாக நிற்கிறது. அந்தக் குடும்ப வாரிசுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும், ஓய்வு பெற்ற பிறகு இறந்த பணியாளருக்கு கௌரவமான ஈமக்கிரியை செய்வதற்குக் கூட வழியில்லாத நிலை இருப்பதை சுட்டிக்காட்டி அரசு ஈமக்கிரியை நிதியை வழங்குவதற்கு முன்வர வேண்டுமென வலியுறுத்தினோம்.


ஒன்றிய அரசாங்கம் அங்கன்வாடி திட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியை முழுமை யாக வழங்காமலும், இத்திட்டத்தை சீர்குலைக்கும் வகையிலும் புதிய கட்டுப்பாடுகளை விதித்து நிதி வழங்குவதை மறுத்து வரும் நிலையில் மாநில அரசின் நிதியில் இருந்து எதுவும் தராத நிலையிலும் மேற்படி கோரிக்கையினை தாயுள்ளத்தோடு பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 24.01.2026 அன்று சட்டமன்றத்தில் அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் ரூபாய் 2000ம் என்பதை ரூபாய் 3400 ஆக உயர்த்தியும், மினி பணியாளர்களுக்கு ரூபாய் 3200 என உயர்த்தியும் உதவியாளர்களுக்கு ரூபாய் 3000 ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

தற்போது ஓய்வுபெறும்போது வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகையான ரூபாய் 1 லட்சத்தை ரூபாய் 2 லட்சமாக உயர்த்தி வழங்கவும், இதுவரையில் இல்லாத அளவிற்கு அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்த நிலையில், அவர்களின் குடும்பம் பாதுகாப்பாக வாழ்வதற்கு ஏதுவாக பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவிகிதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்குவதற்கும் ஓய்வூதியர் இறந்தால் அவரின் இறுதி சடங்கிற்கு ரூபாய் 20,000 வழங்கிடவும் ஆணையிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தொ.மு.ச. பேரவை சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## திருச்சி டி.வி.முத்துகிருஷ்ணன்

## சனவரி 27 (1990)



கழகம் துவக்கப்பட்டபோதே கழகத்தில் முக்கியப் பங்கேற்று பணியாற்றியவர்.

தமிழ்நாட்டின் திராவிட இயக்க இலட்சிய நூல்களை முதன்முதலாக தனது 'திராவிடப் பண்ணை' பதிப்பகம் மூலம் வெளியிட்டவர்.

அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'ஆரியமாயை', 'விடுதலைப்போர்' மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய 'பழக்கூடை', 'இரத்தக்கண்ணீர்', 'விடுதலை கிளர்ச்சி', 'பூந்தோட்டம்', 'பரப்பிரம்மம்' என பல்வேறு இயக்க நூல்களை வெளியிட்டவர்.

அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் அன்பில் தர்மலிங்கம் ஆகியோரின் உற்ற நண்பராக திகழ்ந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.